ஆண்டு பட்டிகை வழக்கு எண்.10/2024

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

| | | | |
|---|---|---|---|
| CC.No. | 10/2024 | LW– 1 | PW– 1 |
| Name | : சின்னப்பொண்ணு ( புகார்தாரர்) | | |
| Father's/Husband's Name | : குமார் | | |
| Village | : ஒடுகம்பட்டி | | |
| Taluk | : நத்தம் | | |
| District | : திண்டுக்கல் | | |
| Age | : 47/2024 | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 21st day of May 2024

சாட்சியம் பதிவு செய்யப்பட்ட நேரம் 1:05 P.M. - 1:44 P.M.

( எதிரி ஆஜர், எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வந்து கூலி வேலை பார்த்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 18.05.2023ம் தேதி ஆஜர் எதிரியின் மைத்துனர் மகனான மனநிலை பாதிக்கப்பட்ட சுவாமிநாதன் என்பவரை என் மகன் சந்தனபாபு, என் கொழுந்தன் மகன் பிரேம்குமார், மற்றும் எனது நாத்தனார் மகன் முத்துக்கிருஷ்ணன் ஆகியோர் கோட்டையூர் அருகில் உள்ள மலையில் இருந்ததாக அவரது அம்மா அழைத்து வரச் சொன்னதன் பேரில், அழைத்து வந்தார்கள். அதனால் ஆஜர் எதிரி 19.05.2023 மற்றும் 20.05.2023 ஆகிய தினங்களில் மது குடித்துவிட்டு வந்து தேவிடியா மகனே, சாமிநாதனை எவன் கூட்டிக் கொண்டு வந்தது, ஏன் கூட்டிக் கொண்டு வந்தீர்கள், எங்களுக்கு இல்லாத அக்கறை உங்களுக்கு ஏன் வந்தது என்று மேலும் அசிங்கமாக பேசி வந்தார்.

2. அதன்பேரில் 20.05.2023ம் தேதி இரவு சுமார் 10.30 மணியளவில் நாங்கள் ஆஜர் எதிரியிடம் ஏன் இவ்வாறு பேசுகிறீர்கள் என்று கேட்டதற்கு ஆஜர் எதிரி அவரது மனைவி அடைக்கம்மாள் மற்றும் மகள் உமா மகேஸ்வரி ஆகியோர் எங்களை கல்லை எடுத்து எறிந்தார்கள். அதைக் கேட்க வந்த எங்கள் பையன்கள் மூவரையும் பொன்னுச்சாமி கையில் வைத்திருந்த கத்தியால் சந்தனபாபுவின் இடது பக்க விலாவிலும், பிரேம்குமார் இடது முழங்கையிலும், முத்துக்கிருஷ்ணனை நெஞ்சிலும் குத்தினார். மேலும் என்னையும் இடது பக்க முழங்காலில் குத்தி காயப்படுத்தினார். எனது முழங்காலில் தற்போதும் அந்த காயம் உள்ளது.

3. அப்போது அதை தடுக்க வந்த பொன்னுச்சாமியின் மனைவி அடைக்கம்மாளுக்கும் வயிற்றில் குத்தி ரத்தக் காயம் ஏற்பட்டது. தடுக்க வந்த அடைக்கம்மாளுக்கும், பொன்னுச்சாமியின் கையில் இருந்த கத்தியால் குத்தி ரத்தக் காயம் ஏற்பட்டது. பின்னர் எதிரி அவரது குடும்பத்தினருடன் ஆட்டோவில் ஏறி சென்றுவிட்டார்கள். காயம்பட்ட நாங்கள் 4 பேரும் நத்தம் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்தோம். பின்னர் காவல் நிலையம் சென்று நான் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவை பக்கத்து ஊர்க்காரர் ஒருவரிடம் நான் சொல்லி எழுதச் சொன்னேன். அதன் பின்னர் அதில் நான் கையெழுத்து செய்து காவல் நிலையத்தில் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்ததுதான். அதில் உள்ளை கையெழுத்தும் என்னுடையதுதான். **(புகார் மனு அ.சா.ஆ.1ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** பின்னர் நாங்கள் மேல் சிகிச்சைக்காக திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் சேர்ந்து சிகிச்சை எடுத்துக் கொண்டோம். அங்கு நான் ஒரு வார காலமும், என் மகன் சந்தனபாபு, பிரேம்குமார் மற்றும் முத்துக்கிருஷ்ணன் ஆகியோர் ஒரு மாத காலமும், சிகிச்சை எடுத்துக் கொண்டோம். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

4. சண்டை பொன்னுச்சாமி வீட்டு முன்பாக நடந்தது என்றால் பொன்னுச்சாமி சத்தம் போட்டது ரோட்டில், நாங்கள் கேட்க சென்றபோது அவர்கள் வீட்டிற்கு சென்றுவிட்டார்கள். சாட்சி சேகர் எனது கொழுந்தனார், சாட்சி வெள்ளைத்தாய் எனது நாத்தனார். சாட்சி ஜெயப்பிரகாஷ் எனது கொழுந்தனார் மகன். சாட்சி முத்தழகு என் கொழுந்தனார் மனைவி ஆவார்கள். சாட்சி வெள்ளைத்தாய் மகன் தான் காயம்பட்ட முத்துக்கிருஷ்ணன் என்றால் சரி. ஜெயப்பிரகாசின் பெரியப்பா மகன்தான் சாட்சி பிரேம்குமார் என்றால் சரி. சாட்சி முத்தழகு மகன் பிரேம்குமார் என்றால் சரி.

5. மனநிலை பாதிக்கப்பட்டதாக சொல்லப்படும் நபர் எதிரியின் மைத்துனர் மகன் என்றால் ஆமாம். எதிரியின் வீடும், அந்த பையனின் வீடும் அருகருகே உள்ளது என்றால் சரி. எதிரியின் வீட்டிற்கு மேற்கு பக்கம் 3 வீடுகள் தள்ளி எங்கள் வீடு உள்ளது. அதாவது அடுத்த தெரு என்றால் சரி. சாட்சி ஜெயபிரகாஷ், முத்தழகு, வெள்ளைத்தாய் ஆகியோர் வீடு எங்கள் வீட்டிற்கு மேற்கில் உள்ளது என்றால் எங்கள் வீட்டிற்கு பின்னால் உள்ளது. சேகர் வீடு மேற்கில் ஊர் எல்லையில் உள்ளது என்றால் சரி. பிரேம்குமார் வீடு சேகர் வீட்டிற்கு பின் பக்கம் உள்ளது. அதற்கு பக்கத்தில்தான் முத்துக்கிருஷ்ணன் வீடு உள்ளது என்றால் சரி.

6. புகாரை யார் எழுதினார்கள் என்றால் ஒடுகம்பட்டியைச் சேர்ந்தவர்தான், ஆனால் அவர் பெயர் தெரியவில்லை. சம்பவம் நடந்த போது புகாரை எழுதியவர் அங்குஇல்லை என்றால் சரி. எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு எவ்வளவு நாட்கள் சிகிச்சை எடுத்துக் கொண்டேன் என்றால் ஒரு வாரம் சிகிச்சை எடுத்துக் கொண்டேன். போலீஸ் விசாரணையில் நான் ஒரு வாரம் சிகிச்சையில் இருந்ததாக சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். சாட்சி கமலாதேவி,

சாட்சி முத்துக்கிருஷ்ணனின் அத்தை மகள் ஆவார். சாட்சி பிரியா, முத்துக்கிருஷ்ணனின் சகோதரி ஆவார். ஒடுகம்பட்டி – குட்டுப்பட்டி செல்லும் தார் ரோட்டிற்கு தென்புறம் எனது வீடு உள்ளது என்றால் சரி. அந்த இடத்தில் மற்ற வீடுகளும், தெருக்களும் உள்ளது என்றால் சரி.

7. போலீஸ் விசாரணையில் எதிரியின் வீட்டில் இருந்து அவரது மனைவி, மகள் ஆகியோர் சம்பவத்தில் ஈடுபட்டதாக சொன்னேனா என்றால் சொன்னேன். எதிரி வீட்டில் அவர்கள் 3 பேரை தவிர வேறு யாரும் இல்லை என்றால் சரி. சம்பவத்தன்று சாட்சி பிரேம்குமாரின் பிறந்த நாள் என்றால் சரி. பிரேம்குமாரின் பிறந்த நாளுக்கு என் மகனும், காயம்பட்ட முத்துக்கிருஷ்ணன், பிரேம்குமார் மற்றும் அவரது நண்பர்கள் மது அருந்திவிட்டு, எதிரியின் வீட்டு முன்பாக சாலையில் வைத்து கேக் வெட்டி ஆரவாரம் செய்தார்கள் என்றால் இல்லை. அவர்களிடம் மது அருந்திவிட்டு சத்தம் போடக்கூடாது என்று கண்டித்து சொன்னதால் அவர்கள் எதிரியிடம் சண்டை போட்டார்கள், அதை தெரிந்து பிறந்தநாள் கொண்டாடுவதால் உங்களுக்கு என்ன கஷ்டம் என்று சொல்லி சாட்சிகளாக வரக்கூடிய எங்கள் உறவினர்கள் எல்லோரும் சேர்ந்து எதிரியை அடித்து காயப்படுத்தினோம் என்றால் சரியல்ல.

8. அப்போதுதான் என் மகன் மது போதையில் எதிரியின் மனைவி அடைக்கம்மாளை கத்தியால் குத்திவிட்டார் என்றால் இல்லை. சாமிநாதன் மனநிலை பாதிக்கப்பட்டவர் அல்ல, அவர் 12ம் வகுப்பு வரை பள்ளிப் படிப்பு முடித்தவர் என்றால் இல்லை. நான் சொல்வது தவறு என்பதால்தான் எதிரியின் மைத்துனர் மனைவி சின்னப்பொண்ணை இவ்வழக்கில் சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. அதுமட்டுமல்லாமல் எனது மகனும், பிரேம்குமார், முத்துக்கிருஷ்ணன் ஆகியோர் எதிரியின் வீட்டிற்கு சென்று அங்கிருந்த டிவி. வாஷிங்மெஷின், மற்றும் வீட்டு உபயோகப் பொருட்களையும்,

இருசக்கர வாகனத்தையும் அடித்து நொறுக்கினார்கள் என்றால் இல்லை. எதிரிக்கு சாத்தாம்பாடி சொந்த ஊர் என்றால் சரி. அவர் எங்கள் ஊரில் திருமணம் செய்து கொண்டு குடியிருந்து வருகிறார் என்றால் ஆமாம்.

9. அவர் வெளியூர்க்காரர் என்பதால் வெளியூர்க்காரருக்கு இங்கு என்ன வேலை என்று சொல்லி அடித்ததால் தற்போது எதிரி ஒடுகம்பட்டியில் இல்லாமல் அவரது மகள் வீட்டில் இருக்கிறார் என்றால் சம்பவத்தின்போது அங்குதான் இருந்தார், தற்போது இல்லை. எதிரியின் மைத்துனர் குடும்பம் எங்கள் ஊரில் உள்ளது என்றால் ஆமாம். என் மகன் குத்தியதால் எதிரியின் மனைவிக்கு அரை அடி ஆழத்தில் குத்துபட்டு குடல் வெளியே வந்துவிட்டது என்றால் இல்லை. அதனால் அவருக்கு சிகிச்சை எடுப்பதற்காக ஆட்டோவில் ஏறி நத்தம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக் கொண்டு, காவல் நிலையத்தில் புகார் கொடுத்துவிட்டு, மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு மருத்துவமனைக்கு சென்றுவிட்டார்கள் என்றால் அதைப் பற்றி தெரியாது.

10. அவர்கள் மருத்துவ சிகிச்சைக்கு சென்ற பிறகு எனது மகனையும், மற்றவர்களையும் காப்பாற்றுவதற்காக வேண்டி எதிரி மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. சந்தனபாபு, பிரேம்குமார், முத்துக்கிருஷ்ணன் ஆகியோர் மது போதையில் பிறந்த நாள் கொண்டாடும்போது நிலை தடுமாறி விழுந்ததால்தான் காயம் ஏற்பட்டது என்றால் இல்லை. சந்தனபாபு கத்தியால் எதிரியை குத்தும்போதுதான் அவர் விலகிக் கொண்டதில் எதிரியின் மனைவிக்கும், முத்துக்கிருஷ்ணனுக்கும் காயம் ஏற்பட்டது என்றால் இல்லை. பொன்னுச்சாமிதான் குத்தினார்.

11. என் உறவினர்கள் 12 பேர் சேர்ந்து 3 பேரை அடித்தோம், எதிரியின் குடும்பத்தினர் 3 பேர் சேர்ந்து 12 பேரை அடிக்க முடியாது என்றால் நாங்கள் அடிக்கவில்லை. நான் முதல் விசாரணையில் சொன்னது போல் எந்த சம்பவமும்

நடைபெறவில்லை, புகாரானது காவல் துறையில் உள்ள எனது உறவினர்களை வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. அதனால்தான் புகாரை எழுதியது யார் என்று எனக்கு தெரியாது என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும், இவ்வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. என் மகன் சந்தனபாபு, பிரேம்குமார், முத்துக்கிருஷ்ணன், முத்தழகு ஆகியோர் எதிரியையும், அவரது மனைவி மற்றும் மகளை தாக்கியதாக நத்தம் காவல் நிலையத்தில் குற்ற எண்.247/2023 என்ற வழக்கு பதிவு செய்து அது இதே நீதிமன்றத்தில் விசாரணையில் உள்ளது என்றால் சரி, நான் வழக்கிற்காக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

V. Udayasuriya

Digitally signed by V. Udayasuriya
Date: 2024.05.21 15:19:46 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,

நத்தம்

ஆண்டு பட்டிகை வழக்கு எண்.10/2024

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

| | | | |
|---|---|---|---|
| CC.No. | 10/2024 | LW– 3 | PW– 2 |

| | |
|---|---|
| Name | : வெள்ளைத்தாய் (கண்ணுற்ற சாட்சி) |
| Father's/Husband's Name | : அழகர் |
| Village | : ஒடுகம்பட்டி |
| Taluk | : நத்தம் |
| District | : திண்டுக்கல் |
| Age | : 45/2024 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 21st day of May 2024

சாட்சியம் பதிவு செய்யப்பட்ட நேரம் 3:09 P.M. - 3:37 P.M.

( எதிரி ஆஜர், எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வந்து தனியார் கல்லூரியில் சமையல் வேலை பார்த்து வருகிறேன். அ.சா.1 எனது அண்ணன் மனைவி. ஆஜர் எதிரியை தெரியும். அவர் எங்கள் பக்கத்துவீட்டுக்காரர். ஒரு வருடத்திற்கு முன்பாக ஒரு நாள் இரவு 10.30 மணியளவில் ஆஜர் எதிரியின் வீட்டு முன்பாக ஆஜர் எதிரி சக்கிளிய வீடு என்று சொல்லி தவறாக பேசிக் கொண்டிருந்தார். அப்போது சந்தனபாபுவும், பிரேம்குமாரும் விலக்க சென்றார்கள். அப்போது முத்துக்கிருஷ்ணன் என்பவர் போலீஸ் பயிற்சிக்காக சென்றிருந்தபோது காலில் சுளுக்கி கட்டு போட்டிருந்தார். அவரை பார்க்கத்தான் நான் அங்கு வந்திருந்தேன்.

2. அப்போது என் மகன் அவர்களின் அருகில் நின்றிருந்தபோது, பொன்னுச்சாமி கத்தியால் எனது மகளை நெஞ்சில் குத்தி ரத்தக்காயத்துடன் வீட்டிற்கு வந்தார். அதைப் பார்த்த பின்புதான் என்ன நடந்தது என்று நான் கேட்டேன். அதற்கு என் மகன் பொன்னுச்சாமி பெரியப்பா, சந்தனபாபு மற்றும் பிரேம்குமாருடன் விளக்கை அணைத்துவிட்டு மல்லுக்கட்டி கொண்டிருந்ததாகவும், அதை அருகில் சென்று நான் பார்த்தபோது பொன்னுச்சாமி பெரியப்பா கத்தியால் என்னை நெஞ்சில் குத்திவிட்டார் என்று சொன்னார். அந்த சம்பவத்தில் சந்தனபாபுவின் இடது பக்க விலாவில் கத்தி குத்து காயமும், பிரேம்குமாரின் இடது கையில் கத்தி குத்து காயமும் இருந்தது. அ.சா.1 க்கு காலில் ஒரு காயம் இருந்தது.

3. முத்தழகு என்பவருக்கு உடம்பில் ஊமைக் காயம் இருந்தது. பின்னர் ரத்தக் காயத்துடன் இருந்தவர்களை சிறுகுடி அரசு மருத்துவமனையில் காண்பித்து முதலுதவி சிகிச்சை எடுத்துக் கொண்டு விட்டு நத்தம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தோம். அங்கு என் மகன் முத்துக்கிருஷ்ணனுக்கு பலத்த காயம் ஏற்பட்டு குடலில் காயம் ஏற்பட்டிருப்பதாக சொன்னார்கள். 21.05.2023 ம் தேதி நத்தம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துவிட்டு, திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் சேர்த்து அறுவை சிகிச்சை செய்து 2 மாத காலம் உள்நோயாளியாக என் மகன் சிகிச்சை எடுத்துக் கொண்டார். என் மகனுக்கு நெஞ்சில் ஏற்பட்ட காயத்திற்காக 45 தையல் போடப்பட்டுள்ளது. என் மகனுக்கு உணவு சாப்பிடும் போது வயிற்றில் வலி இருப்பதாகவும், முதுகில் குத்துவதாகவும், இன்றுவரை வேதனைப்பட்டு வருகிறார். அதனால் என் மகனால் மீண்டும் போலீஸ் வேலைக்கு செல்ல முடியாமல் அவருடைய வாழ்வாதாரமே முடங்கிவிட்டது. போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

4. எத்தனை மணிக்கு புகார் கொடுக்கப்பட்டது என்றால் 21.05.2023 அன்று காலை 6.00 முதல் காலை 8.00 மணிக்குள் கொடுக்கப்பட்டது. சம்பவத்தன்று

என் தம்பி மகன் பிரேம்குமாருக்கு பிறந்த நாள் என்றால் சரி. என் மகனுக்கு எதனால் காலில் கட்டு போடப்பட்டிருந்தது என்றால் காவலர் பயிற்சிக்கு சென்றிருந்தபோது காலில் ஜவ்வு விலகிவிட்டது, அதனால் கட்டு போடப்பட்டிருந்தது. என் வீட்டிற்கு பக்கத்தில்தான் சின்னப்பொண்ணு மற்றும் முத்தழகு வீடு உள்ளது என்றால் ஆமாம். மேற்கு பக்கம் உள்ளது. ஜெயப்பிரகாஷ் என் உடன்பிறந்த தம்பி மகன் ஆவார். பிரேம்குமாரும் என் தம்பி மகன்தான்.

5. சாட்சி பிரியா எனது மகள் ஆவார். சாட்சி கமலாதேவி என் அண்ணன் மகள் ஆவார். நானும், எதிரியும் வெவ்வேறு சமுதாயத்தை சேர்ந்தவர்கள் என்றால் ஆமாம். எதிரியின் சொந்த ஊர் சாத்தாம்பாடி என்றால் சரி. எங்கள் ஊரில் திருமணம் செய்து கொண்டு அங்கு வந்து குடியிருக்கிறார் என்றால் ஆமாம். என் வீட்டு பக்கத்தில் பல சமுதாயத்தை சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள் என்றால் இல்லை, அவர்கள் தொலைவில்தான் உள்ளார்கள். எவ்வளவு தொலைவு என்றால் சுமார் 50 மீட்டர் தூரம் இருக்கும். எதிரியின் வீட்டிற்கு பக்கத்தில் உள்ள மண் சாலையிலும், என் வீட்டிற்கு சிமெண்ட் சாலையிலும் செல்ல வேண்டும் என்றால் சரி. என் வீட்டிற்கும், எதிரி வீட்டிற்கும் வெவ்வேறு பாதைகள் உள்ளது என்றால் சரி.

6. என் வீட்டிற்கும், எதிரி வீட்டிற்கும் நடுவில் கம்பி வேலி உள்ளது என்றால் சரி. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதியில் பிரேம்குமாரின் பிறந்த நாளுக்கு என் மகன் முத்துக்கிருஷ்ணன், பிரேம்குமார், சந்தனபாபு மற்றும் அவர்களுடைய நண்பர்கள் மது அருந்திவிட்டு எதிரி வீட்டிற்கு செல்லக்கூடிய சாலையில் கேக் வெட்டி ஆரவாரம் செய்து குடித்துவிட்டு மது போதையில் அநாகரிகமாக பேசி சத்தம் போட்டார்கள் என்றால் இல்லை. அதை எதிரியும், அவரது குடும்பத்தினரும் கண்டித்து பேசியதால் என் மகனும், சந்தனபாபு, பிரேம்குமார் ஆகியோர் சேர்ந்து அவர்களைஅடித்து காயப்படுத்தினார்கள் என்றால் இல்லை.

அப்போது தடுக்க வந்த எதிரியின் மனைவி அடைக்கம்மாளை என் மகன் பிடித்துக் கொள்ள சந்தனபாபு கத்தியால் குத்தினார் என்றால் இல்லை.

7. மறுபடியும் சந்தனபாபு எதிரியை குத்த முயற்சித்த போது எதிரி விலக்கிக் கொண்டார், அப்போது சந்தனபாபு என் மகனை குத்திவிட்டார் என்றால் இல்லை. எதிரி வெளியூர்க்காரர் என்பதால் எங்கள் ஊரில் நாங்கள் என்ன வேண்டுமானாலும் ஆரவாரம் செய்வோம், வெளியூர்க்காரன் எங்களை நீ கேட்க உனக்கு என்ன அதிகாரம் உள்ளது என்று சொன்னார்கள் என்றால் இல்லை. சந்தனபாபு, பிரேம்குமாரின் பிறந்தநாளுக்கு பட்டா கத்தியை வைத்து கேக் வெட்டினார்கள், அந்த கத்தியால்தான் என் மகனை குத்தியுள்ளார்கள் என்றால் இல்லை. மது போதையில் ஒருவருக்கொருவர் அடித்துக் கொண்டதில்தான் சந்தனபாபுவிற்கும், பிரேம்குமாருக்கும் காயம் ஏற்பட்டது என்றால் இல்லை.

8. நாங்கள் எல்லோரும் ஓரினத்தைச் சேர்ந்த உறவினர்கள் என்பதாலும், எதிரி வேறு சமுதாயத்தை சேர்ந்த வெளியூர்க்காரர் என்பதாலும், நாங்கள் அவருக்கு எதிராக பொய்யாக சாட்சியம் அளிக்கிறோம் என்றால் இல்லை, நான் தற்போது ஒடுகம்பட்டியில்தான் குடியிருக்கிறேன் என்றால் ஆமாம். எதிரியும், அவரது குடும்பத்தினரும் தற்போது அவர்களது வீட்டில் குடி இல்லை என்றால் சரி. எங்கள் மிரட்டலுக்கு பயந்துதான் எதிரி வெளியூரில் இருக்கிறார், திரும்ப ஊருக்கு வந்தால் நானும், என் உறவினர்களும், என் மகனும், பிரேம்குமார், சந்தனபாபு ஆகியோரும் அவர்களை கொன்று விடுவோம் என்று மிரட்டுவதால்தான் அவர்கள் ஊருக்கு வரவில்லை என்றால் இல்லை.

9. என் மகனும், எனது உறவினர்களும் எதிரியின் வீட்டிற்குள் புகுந்து டிவி, கட்டில், பீரோ, சூரிய ஒளி மின்தகடு, மற்ற வீட்டு உபயோகப் பொருட்கள் ஆகியவற்றை அடித்து நொறுக்கி போட்டுவிட்டார்கள் என்றால் இல்லை. அந்த

பொருட்களை கூட எதிரிகள் இன்னும் எடுக்கவில்லை, அவை அப்படியேதான் உள்ளது என்றால் இல்லை. எதிரியின் மனைவி மருத்துவமனைக்கு சென்று விட்ட நேரத்தில் காவல் துறையில் உள்ள எங்கள் உறவினர்கள் மூலம் பொய்யாக புகார் கொடுத்துள்ளோம் என்றால் இல்லை. நாங்கள் சமுதாய பெயரை சொல்லி பொய்யாக மிரட்டி காவல் துறையில் எதிரி மீது பொய்யாக வழக்கு பதிவு செய்ய வைத்துள்ளோம் என்றால் இல்லை.

10. நான் முதல் விசாரணையில் சொன்னது போல் எதிரி எந்த ஒரு குற்றச் செயலிலும் ஈடுபடவில்லை, அதுபோல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. என் மகன் முத்துக்கிருஷ்ணன், சந்தனபாபு, பிரேம்குமார், முத்தழகு ஆகியோர் சேர்ந்து எதிரியையும், அவரது குடும்பத்தாரையும் அடித்தது சம்பந்தமாக நத்தம் காவல் நிலைய குற்ற எண்.247/2023 என்ற வழக்கு பதிவு செய்யப்பட்டு நிலுவையில் உள்ளது என்றால் இல்லை.

**மறு விசாரணை இல்லை.**

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

V. Udayasuriya

Digitally signed by V. Udayasuriya
Date: 2024.05.21 15:19:46 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்

ஆண்டு பட்டிகை வழக்கு எண்.10/2024

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

| | | | |
|---|---|---|---|
| CC.No. 10/2024 | LW– 4 | PW– 3 | |
| Name | : ஜெயப்பிரகாஷ் (கண்ணுற்ற சாட்சி) | | |
| Father's/Husband's Name | : சோலைமலை | | |
| Village | : ஒடுகம்பட்டி | | |
| Taluk | : நத்தம் | | |
| District | : திண்டுக்கல் | | |
| Age | : 23/2024 | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 21st day of May 2024

சாட்சியம் பதிவு செய்யப்பட்ட நேரம் 3:39 P.M. - 4:06 P.M.

( எதிரி ஆஜர், எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வந்து தேனி மாவட்டத்தில் உள்ள தனியார் வங்கியில் மேலாளராக பணியாற்றி வருகிறேன். அ.சா.1 ஐ தெரியும். ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 20.05.2023 அன்று இரவு சுமார் 10.00 முதல் 11.00 மணியளவில் நான் எங்கள் வீட்டு மாடியில் என் அலுவலகம் சம்பந்தமாக நான் போனில் பேசிக்கொண்டிருந்தபோது, ஆஜர் எதிரி அவர் வீட்டு முன்பாக கையில் கத்தி வைத்திருந்தார். கோத்தா, கொம்மா என்று கெட்ட வார்த்தைகளால் பேசிக் கொண்டு சந்தனபாபுவை கத்தியால் குத்த முயற்சித்தபோது அவர் ஒதுங்கி கொண்டார். அப்போது காலில் அடிபட்டு அருகில் நின்று கொண்டிருந்த முத்துக்கிருஷ்ணனின் நெஞ்சில் கத்தி குத்து காயம் ஏற்பட்டது.

2. அதன் பின்னர் சந்தனபாபு என்பவரை இடது விலாவிலும், பிரேம்குமாரின் இடது கையிலும் எதிரி கத்தியால் குத்தி காயப்படுத்தினார். பின்னர் நான் அவர்களை விலக்கிவிட்டபோது எதிரியை அவரது மனைவி மற்றும் மகள் உமா மகேஸ்வரி ஆகியோர் எதிரியை பிடித்து இழுத்து கொண்டு சென்றார்கள். நான் பார்த்தபோது, சந்தனபாபு, பிரேம்குமார் மற்றும் முத்துக்கிருஷ்ணன் ஆகியோர் ரத்தக் காயமாக இருந்தார்கள். அவர்கள் யாரிடமும் கத்தி இல்லை. மேலும் எதிரி அவரது வீட்டு அருகில் நின்று கொண்டு யாரும் வராதீர்கள், கத்தியால் குத்திவிடுவேன் என்று மிரட்டிக் கொண்டிருந்தார். பின்னர் காயம்பட்டவர்களை எனது இருசக்கர வாகனம் மூலம் சிறுகுடி அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றேன்.

3. அங்கு முதலுதவி சிகிச்சை எடுத்துக் கொண்ட பின்னர் அவசர ஊர்தி மூலம் நத்தம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தேன். பின்னர் அங்கிருந்து அவர்களை மேல் சிகிச்சைக்காக திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். போலீசார் என்னை போன் மூலம் 2 முறை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

4. அ.சா.2 வெள்ளைத்தாய் வீட்டிற்கு மேற்கு பக்கம் என் வீடு உள்ளது என்றால் வடமேற்கு பக்கம் உள்ளது. நான் முதல் விசாரணையில் சொன்ன சம்பவம் எதிரியின் வீட்டு முன்னால் நடந்தது என்றால் ஆமாம். நான் முதல் விசாரணையில் சொன்ன சம்பவத்தை தவிர அதற்கு முன்பு நடந்த சம்பவத்தை நான் பார்க்கவில்லை என்றால் சரி. நான் சம்பவத்தை பார்ப்பதற்கு முன்பாக எவ்வளவு நேரமாக போன் பேசிக் கொண்டிருந்தேன் என்றால் ஒரு மணி நேரமாக பேசிக் கொண்டிருந்தேன். இவ்வழக்கின் சாட்சிகள் அனைவரும் என் உறவினர்கள் என்றால் சரி. பிரேம்குமார் என் பெரியப்பா மகன் ஆவார். சாட்சி முத்தழகுவின் கணவர் முருகேசன் என் பெரியப்பா.

5. நான் சொன்ன தேதியில் பிரேம்குமாருக்கு பிறந்த நாள் என்றால் சரி. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதியில் பிரேம்குமாரின் பிறந்த நாளுக்கு முத்துக்கிருஷ்ணன், பிரேம்குமார், சந்தனபாபு மற்றும் அவர்களுடைய நண்பர்கள் மது அருந்திவிட்டு எதிரி வீட்டிற்கு செல்லக்கூடிய சாலையில் கேக் வெட்டி ஆரவாரம் செய்து குடித்துவிட்டு மது போதையில் அநாகரிகமாக பேசி சத்தம் போட்டார்கள் என்றால் இல்லை. அதை எதிரியும், அவரது குடும்பத்தினரும் கண்டித்து பேசியதால் முத்துக்கிருஷ்ணன், சந்தனபாபு, பிரேம்குமார் ஆகியோர் சேர்ந்து அவர்களைஅடித்து காயப்படுத்தினார்கள் என்றால் இல்லை. அந்த சமயத்தில் சந்தனபாபு, பிரேம்குமாரின் பிறந்தநாளுக்கு பட்டா கத்தியை வைத்து கேக் வெட்டினார்கள், மது போதையில் அந்த கத்தியால் பொன்னுச்சாமியை குத்த சென்றபோது அதை தடுக்க வந்த அவரது மனைவி அடைக்கம்மாளை சந்தனபாபு குத்திவிட்டார் என்றால் இல்லை.

6. அதன்பின்னிட்டு முத்துக்கிருஷ்ணன், பிரேம்குமார், சந்தனபாபு மற்றும் உறவினர்களும், நண்பர்களும் எதிரியின் வீட்டிற்குள் புகுந்து டிவி, கட்டில், பீரோ, சூரிய ஒளி மின்தகடு, மற்ற வீட்டு உபயோகப் பொருட்கள் ஆகியவற்றை அடித்து நொறுக்கி போட்டுவிட்டார்கள் என்றால் இல்லை. இந்த சம்பவத்தின்போது எனது தம்பி கோபியும் சம்பவ இடத்தில் இருந்தார் என்றால் ஆமாம், அவர் சம்பவம் முடிந்துதான் அந்த இடத்திற்கு சென்றார். நான் மாடியை விட்டு இறங்கி வந்து சம்பவ இடத்திலிருந்த என் தம்பி கோபியை அடித்து இழுத்துச் சென்றேன் என்றால் அடிக்கவில்லை, இழுத்துச் சென்றேன். இந்த சம்பவத்தில் என் தம்பி, என் நண்பர்கள் மற்றும் என் உறவினர்களை காப்பாற்றுவதற்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் இல்லை.

7. நானும், எதிரியும் வெவ்வேறு சமுதாயததை சேர்ந்தவர்கள் என்றால் சரி. எதிரி வெளியூர்க்காரர், திருமணம் செய்து கொண்டு அங்கு குடியிருக்கிறார் என்றால் ஆமாம். மாமனார் வீட்டில் உள்ளார். என் தம்பி கோபி உள்ளிட்ட பிரேம்குமார், முத்துக்கிருஷ்ணன், சந்தனபாபு மற்றும் எங்கள் உறவினர்கள் அந்த பகுதியில் இரவு நேரத்தில் குடித்துவிட்டு தகாத வார்த்தைகள் பேசிக் கொண்டு ரகளையில் ஈடுபட்டு இரவு நேரத்தில் தொல்லை கொடுத்து வருகிறார்கள் என்றால் இல்லை. அதை எதிரி கேட்டதால்தான் வெளியூர்க்காரர், நீ என்ன கேட்கிறாய், நாங்கள் என்ன வேண்டுமானாலும் செய்வோம் என்று சொல்லி எதிரியையும், அவரது மனைவி மற்றும் மகளையும் அடித்துக் காயப்படுத்தியுள்ளார்கள் என்றால் இல்லை.

8. அடைக்கம்மாளை கத்தியால் குத்தி மரணப் படுக்கையில் படுக்க வைத்தார்கள் என்றால் இல்லை. அது சம்பந்தமாக முத்துக்கிருஷ்ணன், சந்தனபாபு, பிரேம்குமார், முத்தழகு ஆகியோர் சேர்ந்து எதிரியையும், அவரது குடும்பத்தாரையும் அடித்தது சம்பந்தமாக நத்தம் காவல் நிலைய குற்ற எண்.247/2023 என்ற வழக்கு பதிவு செய்யப்பட்டு நிலுவையில் உள்ளது என்றால் ஆமாம். நான் முதல் விசாரணையில் சொன்னது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை, என் உறவினர்களை காப்பாற்ற வேண்டி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன், எதிரிக்கும், இவ்வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. நான் பிஏ படித்துள்ளேன், 2 வருடங்களாக வங்கியில் பணிபுரிகிறேன். எனக்கு பொது அறிவு அதிகம் இருப்பதால், நண்பர்களை காப்பாற்ற வேண்டி எதிரி மீது வழக்கு பதிவு செய்ய யோசனை கொடுத்துள்ளேன் என்றால் இல்லை. நான் மாடியில் இருந்து சம்பவத்தை பார்த்ததாக சொல்வது பொய்யானது என்றால் சரியல்ல.

9. எந்த தேதியில் காவல் துறையினர் என்னை போன் மூலம் விசாரித்தனர் என்றால் தேதி தெரியவில்லை. உணவுஇடைவேளையின்போது விசாரித்தார்கள். எவ்வளவு நாட்களுக்கு விசாரித்தார்கள் என்றால் 2 மாதம் கழித்து விசாரித்தார்கள். என்னை அவ்வாறு போலீசார் விசாரிக்கவில்லை, வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

V.
Udayasuriya

Digitally signed by
V. Udayasuriya
Date: 2024.05.21
1 5:19:46 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,

நத்தம்